சுருக்கம்

கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – 2022-23-ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலி மாவட்டம், மானூரில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு (இருபாலர்) நிரந்தர கட்டடம் கட்டுதல் – ரூ.11,33,00,000/–க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதிஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வித் (டி1) துறை

அரசாணை(நிலை)எண்.141

நாள்: 02.08.2022
சுபகிருது வருடம், ஆடி–17
திருவள்ளுவராண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.228, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள்.19.11.2021.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் எண். ந.க.எ4/36489/2021, நாள் 15.02.2022.
3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.18937/ஜெ3/2022, நாள் 09.05.2022.

*******

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மற்றவைக்கிடையே, 2022-23-ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலி மாவட்டம், மானூர் என்ற இடத்தில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஐந்து பாடப் பிரிவுகளுடன் துவங்குவதற்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11.04.2022 அன்று நடைபெற்ற உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது பின்வரும் 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.199.36 கோடி செலவில் கட்டடம் கட்டப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

2016–17 முதல் 2020–21 வரை உள்ள ஆண்டுகளில் தொடங்கப்பட்ட கல்லூரிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | குடவாசல் | – | திருவாரூர் மாவட்டம் (2017–18) |
| 2. | காட்டுமன்னார் கோவில் | – | கடலூர் மாவட்டம்(2017–18) |
| 3. | இராமேஸ்வரம் | – | இராமநாதபுரம் மாவட்டம் (2019–20) |
| 4. | திருவில்லிபுத்தூர் | – | விருதுநகர் மாவட்டம்(2020–21) |
| 5. | ஜெயங்கொண்டம் | – | அரியலூர் மாவட்டம் (2020–21) |
| 6. | தரகம்பட்டி | – | கரூர் மாவட்டம்(2020–21) |

<u>2022-23 ஆம் ஆண்டில் தொடங்கபடவுள்ள கல்லூரிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | திருச்சுழி | - | விருதுநகர் மாவட்டம் |
| 2. | திருக்கோவிலூர் | - | கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 3. | தாளவாடி | - | ஈரோடு மாவட்டம் |
| 4. | ஒட்டன்சத்திரம் | - | திண்டுக்கல் மாவட்டம் |
| 5. | மானூர் | - | திருநெல்வேலி மாவட்டம் |
| 6. | தாராபுரம் | - | திருப்பூர் மாவட்டம் |
| 7. | ஏரியூர் | - | தருமபுரி மாவட்டம் |
| 8. | ஆலங்குடி | - | புதுக்கோட்டை மாவட்டம் |
| 9. | கூத்தாநல்லூர் | - | திருவாரூர் மாவட்டம் |
| 10. | சேர்க்காடு | - | வேலூர் மாவட்டம் |

3. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தற்போது,திருநெல்வேலி மாவட்டம், மானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) அமைப்பதற்கு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் செயல்முறையில் திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், மதவக்குறிச்சி கிராமம் புல எண்.242/1A-ல் விஸ்தீர்ணம் 18.88.50 ஹெக்டேர் சர்க்கார் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் 242/1A2 என்ற புதிய உட்பிரிவில் 08.00.38 ஹெக்டேர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தினை உயர்கல்வி துறைக்கு நிலமாற்றம் செய்திடவும், மாற்று நிலமாக மானூர் வட்டம், நாஞ்சான்குளம் கிராமம், புலஎண் 154/1-ல் குன்று புறம்போக்கு மொத்த விஸ்தீர்ணம் 50.73.50 ஹெக்டேர் நிலத்தில் 154/1A என்ற புதிய உட்பிரிவில் 8.00.38 ஹெக்டேர் நிலத்தினை மேய்க்கால் புறம்போக்காக நிலவகை மாற்றம் செய்திட முன் நுழைவு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

4. மேலே, பத்தி-2ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பிற்கிணங்க, கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திருநெல்வேலி மாவட்டம், மானூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் முன் நுழைவு அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ள மேற்படி நிலத்தில் நிரந்தர கட்டடம் கட்டுவதற்க்கு சென்னை-25, பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளரியிடமிருந்து ரூ.11.33 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட திட்டமதிப்பீடு மற்றும் வரைபடம் பெறப்பட்டுள்ளது என தெரிவித்து, அத்திட்டமதிப்பீட்டின்படி அக்கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.11,33,00,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு 2022-23-ஆம் நிதியாண்டிலேயே வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, 2022-23-ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலி மாவட்டம், மானூரில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு (இருபாலர்) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ள திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், மதவக்குறிச்சி கிராமம் புதிய உட்பிரிவு புல எண்.242/1A2-ல், 08.00.38 ஹெக்டேர்

விஸ்தீர்ணம் கொண்ட சர்க்கார் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு ரூ.11,33,00,000/-க்கு (ரூபாய் பதினொறு கோடியே முப்பத்துமூன்று இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதியும் மற்றும் அத்தொகையை 2022-23-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமதிப்பீட்டிலிருந்து ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "4202 - கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு - 01 பொதுக்கல்வி - 203 பல்கலைக் கழக கல்வியும், உயர்கல்வியும் - மாநிலச் செலவினங்கள் -JB கட்டடங்கள் - தொழில்நுட்பக்கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை - 416 பெரும்பணிகள்-01 பெரும்பணிகள்.
>
> (IFHRMS த.தொ.கு. 4202-01-203- JB-41601)"

7. இவ்வாணை, அரசாணை (நிலை) எண். 519, நிதித் (சம்பளங்கள்) துறை, நாள்.29.9.1997-இன் படி, நிதித் துறையின் ஒப்புதலைப் பெற வேண்டியதில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-15.
தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை -25.
சம்பந்தப்பட்ட கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மானூர், திருநெல்வேலி மாவட்டம் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர்.
உள்ளுறை கணக்கு அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-9.

<u>நகல்</u>

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை,சென்னை-9.
நிதித்(கல்வி-I)துறை, சென்னை -9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

2/8/22
பிரிவு அலுவலர்
2/8/22